**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 202/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | விவேகானந்தன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | மார்கபந்து | RELIGION | இந்து |
| AGE | 56 | OCCUPATION | |
| VILLAGE | காமாட்சியம்மன்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 11.09.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தீ பெட்டி வியாபாரம் செய்கிறேன். சாட்சி சொல்ல என்னை வாதி தான் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம் 15 நாட்களுக்கு முன்பு வாதி என்னை அழைத்து வழக்கறிஞர் அலுவலகம் சென்றோம் என்ன நடந்தது என்று கேட்டார் நான் சொன்னேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான்.

2. பிரதிவாதி வினோத்குமாரை எப்படி தெரியும் என்றால் எனது வீட்டிலிருந்து 15 வீடு தள்ளி உள்ளார். அவரை 7, 8 வருடங்களாக அரிசி கடை வைத்திருந்ததால் தெரியும். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதிக்காக சாட்சியம் அளிக்க பிரதிவாதியை தெரியும் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எவ்வளவு பணம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் 50,000/–. பிரதிவாதி எங்கு வைத்து எத்தனை மணிக்கு பணம் வாங்கினார் என்றால் தாலுக்கா அலுவலகத்திடம் வைத்து பகல் 12.00 மணிக்கு பணம் வாங்கினார்.

3. யார் யார் அப்போது உடனிருந்தார்கள் என்றால் வினோத்குமார், ஏகாம்பரம், சண்முகம் மற்றும் பாண்டு எழுதிய லிங்கேஷ்வரன் இருந்தார்கள். எந்த தேதியில் பாண்டு எழுதினார்கள் என்றால் 26.10.2019–ல் எழுதினார்கள். என்னை சாட்சி கையெழுத்து போட யார் கூப்பிட்டார் என்றால் வினோத்குமார் கூப்பிட்டார். வினோத்குமார் என்னவென்று கூப்பிட்டார் என்றால் ஏகாம்பரத்திடம் பணம் கேட்டுள்ளேன் அவர் கொடுப்பதாக சொல்லியுள்ளார் அதனால் சாட்சிக்காக வாங்க என்று கூப்பிட்டார்.

4. என்னை மட்டும் தான் கூப்பிட்டாரா என்றால் சண்முகம் என்பவரையும் கூப்பிட்டார். சண்முகம் யார் என்றால் அவர் வேன் வைத்து ஓட்டுகிறார். சண்முகம் எவ்வளவு நாள் எனக்கு பழக்கம் என்றால் 2019—ல் இருந்து தான் தெரியும். அவர் குடியாத்தம் தான். கடன் வாங்கியதாக சொல்லும் ரூ.50,000/—த்தையும் 500 ரூபாய் நோட்டுகளாக ஒரே கட்டாக கொடுத்தார். பிரதிவாதியின் பூர்விகம் எந்த ஊர் என தெரியும் என்றால் கோப்பம்பட்டி வளத்தூர் பக்கம் உள்ளது.

5. பிரதிவாதி பற்றி முழு விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் 2வது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். பிரதிவாதி கையெழுத்தை இடதுபக்க கையால் போட்டாரா அல்லது வலதுபக்க கையால் போட்டாரா என்றால் வலதுபக்க கையால் போட்டார்.

6. நான் கையெழுத்து போட்டபிறகு தான் பிரதிவாதி கையெழுத்து போட்டாரா என்றால் இல்லை அவர் கையெழுத்து போட்டபிறகு நான் போட்டேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிலுள்ள கையெழுத்து பிரதிவாதியின் உடையது அல்ல என்றால் சரியல்ல அவர் தான் போட்டார். பிரதிவாதிக்கு என்னை தெரியவே தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.